(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 279]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2013 யூன் 05, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1955/ '11

1.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கா/பிரஜாபதி கோதமி மகளிர் கல்லூரிக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் தனிப்பட்ட உரிமையாளரொருவர் அன்பளிப்பாக நல்கிய அம்பலன்கொடை விலேகொடையில் அமைந்துள்ள மூன்று மாடிவீடு, இதுவரை எந்தவித பயன்பாட்டுக்கும் எடுக்கப்படாது சேதத்திற்குள்ளாகி வருகின்றது என்பதையும்;

(ii) சேதமடைந்த நிலையில் காணப்படும் மேற்படி வீடு, பாடசாலையில் கல்வி பயிலும் மாணவிகளது உயிருக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்பதையும்;

(iii) மேற்படி கட்டிடத்தை இடித்தகற்றிவிட்டு, அந்த இடத்தில் கூட்ட மண்டபமொன்றை அமைத்துத் தருமாறு பாடசாலை அதிபர் பல தடவைகள் உரிய அதிகாரிகளிடம் வேண்டியுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாடசாலை அதிபரின் மேற்படி கோரிக்கைக்கு அமைய செயற்படும் பொருட்டு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2206/ '11

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போதைய அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சுகளுக்கான 2012 ஆம் ஆண்டு மொத்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி ஒதுக்கீடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் யாதென்பதையும்;

(iv) அந்த அமைச்சுகளில் வேலை செய்யும் ஆட்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்பதனையும்;

(v) மாதமொன்றுக்கு ஒரு அமைச்சுக்கான மொத்த செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) மேலே சொல்லப்பட்ட ஏதேனும் அமைச்சுகளை இல்லாதொழிக்கவோ அல்லது குறைக்கவோ முடியுமா என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2368/ '12

3\.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மஹிந்த சிந்தனை 'இலங்கையை வெற்றிபெறச் செய்வோம்' கொள்கைத் தொடரின் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவாக ஒரு வேளை சோறு இலவசமாக வழங்கப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின்படி அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பகல் உணவு கிடைக்கின்றதா என்பதையும்;

(ii) இன்றேல் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது பகல் உணவாக ஒரு வேளை சோறு வழங்கப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பகல் உணவு வழங்குவதற்காக மேற்படி பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2373/ '12

4\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சிவில், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஸ்ரீலங்கன் எயார்லைன் கம்பனியின் நிகழ்கால தவிசாளர் யார் என்பதையும்;

(ii) இவரது கல்வி மற்றும் தொழில்வாண்மைத் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) இவரது சம்பளம் யாது என்பதையும்;

(iv) பிற படிகளைப் பெறுவாரெனில் அவை யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு படியினதும் பெறுமதிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஸ்ரீலங்கன் எயார்லைன் கம்பனியில் உள்ள பணிப்பாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பணிப்பாளரதும் கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்வாண்மைத் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு வழங்கப்படுகின்ற படிகளின் பெறுமதிகள் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஸ்ரீலங்கன் எயார்லைன் கம்பனியின் உப தவிசாளரோ அல்லது செயற்படு பணிப்பாளரோ உள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில் இவரது கல்வி மற்றும் தொழில்வாண்மைத் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) இவருக்கு உரித்தான சம்பளம், ஊதியம் மற்றும் பிற படிகளின் பெறுமதிகள் யாவை என்பதையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3045/ '12

5.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பயாகல பிரதேசத்தில் அமைந்துள்ள 25 ஹெக்டயார்களைக் கொண்ட நாகஹதூவ பாரிய வயல்வெளி தற்போது பாழடைந்துள்ளதென்பதையும்;

(ii) ஒழுங்கான நீர் கட்டுப்பாடின்மை, உவர் நீரை தடுப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த கதவுப் பாலங்கள் திருத்தப்படாமை, உர மானியம் ஒழுங்காக கிடைக்காமை மற்றும் தரக்குறைவான விதை நெல் வழங்கப்பட்டமை இவ்வாறு பாழடைவதற்கு காரணமாகியுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாழடைந்த வயல்களை மீண்டும் சாகுபடி செய்யும் அரச கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற அதிகாரிகளின் கவனம் பாழடைந்துள்ள மேற்படி வயல்வெளி மீது இற்றை வரை செலுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) நாட்டை அரிசியில் தன்நிறைவடையச் செய்வதற்கு பாரிய விஸ்தீரணத்தைக் கொண்ட மேலே குறிப்பிட்டவாறான பாழடைந்த வயல்கள் மீண்டும் சாகுபடி செய்யப்பட வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், நாகஹ தூவ வயல்வெளியை மீண்டும் சாகுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3073/ '12

6.

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாணசபை தாபிக்கப்பட்டு அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேல் மாகாணசபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் Iவது நிரலின் (மாகாணசபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் IIIவது நிரலின் (ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3256/ '12

7.

கௌரவ பி. ஹரிசன்,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறைக் கைதிகளை பார்ப்பதற்காக வரும் நபர்கள் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சிறைச்சாலையினுள் பிரவேசிக்கும்போது சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், சிறைச்சாலையினுள் போதைப்பொருள் மற்றும் செல்லிடத் தொலைபேசிகளைக் கொண்டு வருபவர்கள் யாவர் என்பதையும்;

(iii) சிறைச்சாலையினுள் இடம்பெறும் முறைகேடான சம்பவங்களுக்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு கிடைக்கின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) வெலிக்கடை சிறைச்சாலையினுள் இட வதிகளை வழங்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) தற்போது மேற்படி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3290/ '12

8.

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மருதானைப் பிரதேசத்தில் அமைந்துள்ள அல் அதீஸ் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் டபிள்யு. எம். சுரேகா த சில்வா எனும் யுவதி வேலைவாய்ப்புக்காக சவூதி அரேபியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்பதையும்;

(ii) அங்கு இவர் மரணமடைந்துள்ளார் என்பதையும்;

(iii) குறித்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் இவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காக போலி பொலிஸ் அறிக்கைகள் உள்ளிட்ட போலியான தகவல்களை சமர்ப்பித்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) போலியான தகவல்களின் மீது மேலே குறிப்பிடப்பட்டுள்ள யுவதியை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காக செயலாற்றிய மேற்படி நிறுவனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட ரீதியான நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சுரேகா த சில்வா என்பவர் மரணமடைந்ததற்கான காரணம் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த காரணம் யாது;

(iii) மேற்படி மரணம் தொடர்பிலான மரண பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

(iv) இறந்த யுவதியின் சார்பில் இவரது பெற்றோருக்குக் கிடைக்க வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3297/ '12

9.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவில் வசித்த 892291535V இலக்க தேசிய அடையாள அட்டை உரிமையாளரான மயுரன் குமாரசாமி என்பவர் 2009-04-28 ஆம் திகதி வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டாரா என்பதையும்;

(ii) 2010 ஏப்ரல் மாதத்தில் இவர் புனர்வாழ்வளிக்கப்படுவதற்காக பொலன்னறுவை, வெலிகந்த முகாமிற்கு அனுப்பப்பட்டாரா என்பதையும்;

(iii) மேற்படி நபரை 2011 ஆம் ஆண்டில் விடுதலை செய்வதற்கு தீர்மானித்திருந்த போதிலும் இன்று வரை விடுதலை செய்யப்படாது தடுத்து வைத்தல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனின், தற்போது இவர் இருக்கும் முகாம் யாதென்பதையும்;

(v) இவரை விடுதலை செய்யாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3336/ '12

10.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் கடந்த 6 மாத காலத்தினுள் சகல நாடுகளுக்கும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு மற்றும் இந்தியாவுக்கு என வழங்கியுள்ள வெளிநாட்டுக் கடவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) வெளிநாட்டுக் கடவுச் சீட்டுக்களை வழங்குவதன் மூலம் அத்திணைக்களம் நாளொன்றுக்குப் பெறுகின்ற வருமானம் அண்ணளவாக எவ்வளவு என்பதையும்;

(iii) நாட்டினுள் பிரவேசிப்பதற்காக வழங்கப்படுகின்ற வீசாக் காலத்திற்கு மேலதிகமாக நாட்டினுள் தங்கியிருப்பவர்களை இனங்காண்பதற்கும் அதற்கமைய, சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் திணைக்களம் எடுக்கின்ற நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) கடந்த 6 மாத காலத்தினுள் இவ்வாறு அனுமதியற்ற விதத்தில் தங்கியிருப்பவர்கள் சட்டத்தின் பிடியில் சிக்கவைக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3405/ '13

11.

கௌரவ அஜித் குமார,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ ) (i) போக்குவரத்து அமைச்சின் கீழ் காணப்படும் சகல நிறுவனங்களும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கொண்டாட்டங்களுக்காக செலவழித்த பணத்தொகை யாது;

(ii) மேற்படி கொண்டாட்டங்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு கொண்டாட்டத்தையும் ஒழுங்குசெய்த திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் அல்லது நிறுவனங்கள் வெவ்வேறாக யாவை;

(iv) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற 'தெயட்ட கிருள' கண்காட்சிக்காக போக்குவரத்து அமைச்சு செலவழித்த மொத்தப் பணத்தொகை வெவ்வேறாக யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாதுகாப்பற்ற புகையிரதக் குறுக்குப் பாதைகளில் பாதுகாப்பான கடவைகளைப் பொருத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு யாது;

(ii) பாதுகாப்பற்ற புகையிரதக் குறுக்குப் பாதைகள் அமைந்துள்ள இடங்களில் கடவைகளைப் பொருத்துவதற்கு 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2455/ '12

12.

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குளியாபிட்டிய பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டுபொத்த நகர மத்தியில் அமைந்துள்ள விஜயசிறி சமரசிங்க ஞாபகார்த்த நூலகம் புனரமைக்கப்படாமையினால் சுமார் 4 வருடங்களாக மூடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நூலகத்தை திருத்தியமைத்து வாசகர்களின் பாவனைக்காக திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) நூலக கட்டடத்தை புனரமைப்பதற்கு ஏற்கனவே நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2561/ '12

13.

கௌரவ சஜித் பிரேமதாச,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பெண்கள் பணியகத்தில் பெண்கள் மேம்பாட்டிற்காக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இந்த நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத் தொகை வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்ட மேற்படி பணத்தொகைகளும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களும் பெண்களின் மேம்பாட்டிற்காக போதியளவு பங்களிப்பினை வழங்கியுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2792/ '12

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறுநீரக நோயாளிகளின் ஈமோகுளோபினைக் கட்டுப்படுத்துவதற்கு வழங்கப்படும் எரித்ரோபொய்டின் எனும் ஊசிமருந்து சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் அனைத்து அரச வைத்தியசாலைகளுக்கும் தட்டுப்பாடின்றி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இல்லையெனில், மேற்படி ஊசிமருந்து போதியளவில் வழங்கப்படாதுள்ள வைத்தியசாலைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைகளுக்கு சம்பந்தப்பட்ட ஊசிமருந்து போதியளவில் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஊசிமருந்தின் சந்தை விலை எவ்வளவென்பதையும்;

(v) அரச வைத்தியசாலைகளுக்கு மேற்படி மருந்து வழங்கப்படவில்லை எனில், மேற்படி நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தல் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி சிறுநீரக நோய்க்கு எரித்ரோபொய்டின் எனப்படும் ஊசி மருந்துக்கு பதிலீடான மருந்துவகைகள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2817/ '12

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலிருந்து 350 மில்லியன் ரூபா பெறுமதியுடைய சோளம் ஏற்றுமதி செய்யப்பட்டது என 2012 மே 23ஆம் திகதி கூறப்பட்டதா என்பதையும்;

(ii) 2012 மே மாதத்திலிருந்து சோளத்தின் ஏற்றுமதி அளவை மாதாந்த அடிப்படையில் யாதென்பதையும்;

(iii) இலங்கையின் மொத்த சோள உற்பத்தியினை 2011 இலிருந்து இற்றைவரையில் வருடாந்த அடிப்படையில் யாதென்பதையும்;

(iv) சோளத்தின் உற்பத்திச் செலவு யாதென்பதையும்;

(v) இலங்கையில் அதிகளவில் சோளம் பயிரிடப்படும் பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(vi) இலங்கை சோளம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் யாவையென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ அப்துல் ஹலீம்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"அக்குறனை ஜாமிஆ ரஹ்மானியா அறபுக் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

2.

கௌரவ புத்திக பதிரண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"செரெட்சே காமா மன்றம் நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

3.

கௌரவ ஹுனைஸ் பாறூக்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"கல்ஹின்ன ஜாமிஅதுல் பத்தாஹ் அரபுக் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

வெகுசன ஊடக, தகவல் அமைச்சர்,— பத்திரிகைப் பேரவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தின் 10 ஆம் மற்றும் 25 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2013 பெப்புருவரி 15ஆம் திகதிய 1797/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2013.05.22ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— 2011.08.15 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட தற்பொழுதைய கணக்காய்வாளர் தலைமையதிபதியான திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களின் சம்பளம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரவு அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 2011.08.15 ஆம் திகதியிலிருந்து SL-04-2006 சம்பள அளவுத்திட்டத்தின் 02 ஆம் படிநிலையான ரூபா. 48,940.00 இல் நிறுவி சம்பளம் வழங்குதலும், பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துதலும் மற்றும் சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்தலும் வேண்டுமென்றும் இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

12.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

16.

போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

18.

இலங்கைக் கணனிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.